1981 ஏப்ரல் 16]

கிறது. திருநெல்வேலி பஸ்ஸை பாபநாசத்திற்கு நீட்டிக்க அரசாங்கம் முன்வருமா? நாகர்கோவில் பஸ் திருநெல்வேலி வந்து போகிறது. அதிலும் தனியாக பாபநாசத்திற்கு சீட் ஒதுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கோவையிலிருந்து திருநெல்வேலிக்கு இடையே உள்ள தூரம் 380 கி. மீ. ஒரு பேருந்து அங்கே வந்துவிட்டு மீண்டும் கோவைக்கு வந்து விடுகிறது ஒரே நாளில். பாபநாசம் போவது என்றால் 432கி.மீ. தூரமாகிறது. அங்கே போய்விட்டு ஒரே நாளில் திரும்ப கோவை வர முடியாது. ஆனால், பாபநாசத்தை தொட்டுச் செல்கின்ற பேருந்தை இயக்க முடியும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒருபேருந்து கோவையிலிருந்து திருநெல்வேலி சென்றுவர 600 கிலோமீட்டருக்கு மேலே ஆகிறது. அதை பாபநாசத்திற்கு நீட்டினால் ஒரு நாளில் வந்து செல்ல முடியாது என்ற காரணத்தால் தான் அதை சொன்னேன். ஆனால் பாபநாசத்தைத் தொட்டுச் செல்லும் அளவிற்கு நாம் பேருந்துகளை இயக்க முடியும் என்பதை இப்போது சொல்லியிருக்கிறேன்.

[முற்பகல் 9.40]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் ஒரு அழகிய சுற்றுலா ஸ்தலம். அதற்கு அருகிலேயே அகஸ்தியர் அருவி, பாபநாசம் அணை போன்ற சுற்றுலா பயணிகள் வந்து போகக்கூடிய இடங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்திலேயே இது சிறந்த ஒரு சுற்றுலா ஸ்தலம். மற்ற மாவட்டங்களிலிருந்து வரக் கூடிய பேருந்துகள் இதுவரையில் வந்து செல்லுமானால், சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதாலே, இதனை அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து பாபநாசம் 52 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. இதற்கு அரை மணி நேரத்திற்கு ஒரு பேருந்து,— மற்ற போக்குவரத்து கழக பேருந்து— விடப்படுகிறது. அந்த அடிப்படையிலே திருநெல்வேலியிலிருந்து போவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் திருநெல்வேலி வரை விரைவு பேருந்தை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே பாபநாசத்தைத் தொட வேண்டுமென்றுச் சொன்னால் அதற்காக நடவடிக்கை எடுப்பதாக நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

சென்னை—கொல்லம் இருப்புப்பாதை

*வினா எண். 767 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை— கொல்லம் (via) மதுரை மீட்டர்கேஜ் இரயில் பாதையை பிராட்கேஜாக மாற்றி அமைக்க மாநில அரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) கரூர்—தூத்துக்குடி அகல இரயில் பாதை திட்டம் எந்நிலையில் உள்ளது என்பது மாநில அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி (அ) இல்லை.

(ஆ) மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் பிராட் கேஜ், அகலப்பாதை அமைத்து நல்லமுறையிலே பிரயாணம் செய்வதற்கு மத்திய அரசு வசதி செய்து வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், உரங்கள் என்று சொன்னால், மற்றமாநிலங்களிலிருந்து அவை இங்கு வரும் பொழுது அரக்கோணத்திலே இறக்கப்பட்டு அங்கு இருக்கும் பொழுது களவாடப்படுகின்றது. இவைகளை போக்குவதற்கு அகலப் பாதையாக மாற்றியமைக்க, அந்த வேலையை விரைவிலே எடுத்துக் கொள்வதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்தமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர். அவர்களே, இது பற்றி மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதி இருக்கிறோம். அந்த அடிப்படையிலே மீண்டும் வலியுறுத்த அரசு தயாராக இருக்கிறது, தயக்கம் காட்டாது.

திரு மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம், மாநில அரசு எத்தனை புதிய திட்டங்களுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதில் எத்தனை திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நாகர் கோவிலை மதுரை டிவிஷனோடு சேர்க்க வேண்டும் என்றும். திருவனந்தபுரம் டிவிஷனோடு சேர்க்க வேண்டுமென்றும் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இதை தவிர்ப்பதற்கு சகல வசதிகளும் அமைந்திருக்கிற நாகர்கோவிலிலேயே புதிய டிவிஷன் ஒன்றை அமைக்க மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு நாம் ஆறு திட்டங்களுக்கு மத்திய அரசை கேட்டோம். அதிலே ஒரு சிலதையும், அவர்களாக இரண்டு திட்டங்களை எடுத்துக் கொண்டு, ஏறத்தாழ நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதாக ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்

இங்கே டிவிஷன் அமைப்பதை பற்றி பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ மூன்று மாதத்திற்கு முன்பே மத்திய அரசை அணுகி, மத்திய அமைச்சர் அவர்களைப் பார்த்து அதை மதுரையோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். எனவே அந்த அடிப்படையிலே அது வேறுவிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை விரிவாக விவாதிக்கின்ற சூழ்நிலை இப்போது இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—கொல்லம் எக்ஸ்பிரஸ் வண்டியின் வேகத்தை கூட்டுவதற்கு மாநில அரசு ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வேகத்தைக் கூட்டுவதற்கு நாம் வேகமாக நடவடிக்கை எடுப்போம்.

கொடைக்கானல்—சென்னையிடையே சொகுசு பேருந்துப்பணி

*வினா எண். 768 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:

(அ) கொடைக்கானல்—சென்னை (வழி) கொடைரோடு நெடுந்தூர சொகுசு பஸ் விடும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்கு வெளிநாட்டுக்காரர்கள் அதிகமாக வருகிறார்கள். மலைக்குச் செல்வதற்கு மிகுந்த சிரமம் இருக்கிறது ஆகவே, இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஒரு 35 நபர்கள் உட்காரக்கூடிய ஒரு சொகுசு பஸ் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களாக என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி தலைவர் அவர்களே, சொகுசு வண்டிகளிலே இப்போது இருப்பதே 35 இடங்கள் தான். ஆகவே, இன்னும் சிறிய வண்டியாக மாற்றினால் தான் மலைப் பகுதிகளில் இயக்க முடியும் அப்படி சிறிய வண்டியாக